3. கவன ஈர்ப்பு.

திரைப்படங்கள் ஏற்றுமதி பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு ஒன்றினை திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வராத காரணத்தால், இதை திரு. வேடசந்தூர் பால் சுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வேடசந்தூர் வி. பி. பால்சுப்பிரமணியன் : தலைவரவர்களே, ‘‘இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் சமீபத்தில் திரைப்படங்களுக்கான விலையை உயர்த்தி விட்டதால், இலங்கைக்கு ஏற்றுமதியாக வேண்டிய 36 திரைப்படங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதால் தமிழக படத்தயாரிப்பாளர்கள், திரைப் படக் கலைஞர்கள், தொழிலாளர்களிடையே நிலவும் கவலை குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். இலங்கை அரசு அமைத்துள்ள திரைப்பட நிறுவனத்திற்கு தமிழ்ப்படங்கள் இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக விற்கப்படுகின்றன. இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம், திரைப்பட ஏற்றுமதியில் ஒரு முகவராகத்தான் செயல்படுவதாக தெரிகின்றது. கவன ஈர்ப்பு அறிவிப்பில் சொன்ன பொருள் குறித்து குறிப்பிட்ட வகையில் அரசுக்கு முறையீடு வருமேயானால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.

4. தகவல் கோரல்.

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ராம நாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியில் மிகவும் பதட்டமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்த வர்கள் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணும் போராட்டம் நடத்துகிற........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குப் பதில் வேண்டு மானால் அவசரத் தீர்மானம் மூலமாக, 54-வது விதியின் கீழ் கொண்டு வாருங்கள்.